

## 7 –வது முறையாக கழக ஆட்சியை அமைத்து,

# 2-வது முறையாக கழகத் தலைவரை முதல்வராக்குவோம்!

## கோவை மாநகர்– மாவட்டக் கழக சார்பு அணிகள் கூட்டத்தில்

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சியுரை!




கோவை,டிச.19-

**கோவை மாநகர் - வடக்கு - தெற்கு மாவட்டக் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகளுக்கான ஆலோசனைக் கூட்டம் கோவையில், நேற்று நடைபெற்றது. இதில் துணை முதலமைச்சரும் தி.மு.கழக இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு எழுச்சியுரையாற்றினார்.**

**அப்போது, 2026 சட்டமன்றத் தேர்தலில் 200-க்கும் அதிகமான தொகுதிகளில் கழக அணி வெல்ல வேண்டும்' என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிர்ணயித்துள்ள இலக்கை நோக்கி, உழைப்பதற்கான ஆலோசனைகளை வழங்கினார்.**

**அப்போது அவர் ஆற்றிய எழுச்சியுரையின் விவரம் வருமாறு:**

சிறப்புக்குரிய இந்தக் கோவை மாவட்டத்தைச் சேர்ந்த சார்பு அணி நிர்வாகிகள் உங்களையெல்லாம் சந்தித்துப் பேசுவதில் மிகுந்த மகிழ்ச்சி, மிகுந்த பெருமை.

கோவை மாவட்டத்திற்கு எண்ணற்ற முறை வந்து இருக்கிறேன்.

இளைஞர் அணிச் செயலாளராக, சட்டமன்ற உறுப்பினராக, விளையாட்டுத்துறை அமைச்சராக வந்து இருக்கிறேன். ஆனால், இந்தப் பயணம் மறக்க முடியாத ஒரு அனுபவம். ஏனென்றால், தமிழ்நாட்டின் துணை முதலமைச்சர் என்ற பொறுப்பை ஏற்ற பிறகு, முதன்முறையாக இன்றைக்குக் கோவைக்கு வந்து உங்களையெல்லாம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

தலைவர், முதலமைச்சர் அவர்கள் எனக்கு இந்தப் பொறுப்பைக் கொடுத்தவுடன் தமிழ்நாட்டில் இருந்து படையெடுத்து, சென்னைக்கு எனக்கு வாழ்த்து சொல்ல வேண்டும் என்று பலரும் வந்தார்கள். அப்போது நீங்கள் யாரும் சென்னைக்கு வராதீர்கள், நானே உங்கள் மாவட்டத்திற்கு வந்து, சந்தித்து உங்களின் வாழ்த்துகளைப் பெற்றுக் கொள்கிறேன் என்று கூறினேன். அந்த விதத்தில் இன்றைக்கு உங்களையெல்லாம் சந்தித்து உங்களின் வாழ்த்துகளைப் பெறவும் இங்கு வந்து இருக்கிறேன்.

மாலை 3 மணியில் இருந்து தொடர்ந்து நிகழ்ச்சிகள். இயக்கத்தினர், பொதுமக்கள், தாய்மார்கள் என அனைத்து தரப்பினரும் திரண்டு எல்லா இடத்திலும் சிறப்பான வரவேற்பு கொடுத்தனர். இந்த வரவேற்பை அளித்த அண்ணன் செந்தில்பாலாஜி அவர்களுக்கும், மாவட்டக் கழகச் செயலாளர்கள் அண்ணன் கார்த்திக் அவர்களுக்கும், தொண்டா முத்தூர் ரவி அவர்களுக்கும், தளபதி முருகேசன் அவர்களுக்கும், அனைத்து அணிகளுக்கும் என் நன்றியையும், அன்பையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

### கலைஞருக்கு நெருங்கிய மாவட்டம்

இந்தக் கோவை மாவட்டம் கழகத்திற்கு மட்டுமல்ல, இது கலைஞருக்கும் மிக, மிக நெருங்கிய மாவட்டம். கலைஞர் அவர்கள் இந்தக் கோவை மாவட்டத்தில் இருந்துதான் தன் ஆரம்பகால எழுத்துப் பணிகளைச் செய்தார். இந்த மாவட்டத்தில் கலைஞரின் கால் படாத கிராமமே இல்லை, இடமே இல்லை என்று சொல்லலாம். அதேபோல் நம் தலைவருக்கும் அது பொருந்தும். இந்தக் கோவை மாவட்டத்தில் நம் தலைவர் அவர்கள் கொடி ஏற்றாத ஊரே இல்லை என்று சொல்லலாம். அந்த அளவிற்குக் கோவைக்கும், கழகத்திற்கும் ஒரு மிக நெருங்கிய நெருக்கம் உள்ளது.

### கோவை கழகத்தின் கோட்டை

கோவை மாவட்டம் வேறொரு இயக்கத்தின் கோட்டை என்று முன்பு சொல்வார்கள். ஆனால், கோவை என்றைக்குமே கழகத்தின் கோட்டை என்று நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் நீங்கள் நிரூபித்தீர்கள். நம் கோவை மக்களவைத் தொகுதியில் அண்ணன் கணபதி ராஜ்குமார் அவர்களுக்கு ஒரு மிகப்பெரிய வெற்றியைத் தேடித்தந்துள்ளீர்கள். அதற்கு இந்த நேரத்தில் எனது பாராட்டுகளையும், நன்றியையும் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### 2026 சட்டமன்ற தேர்தல்

இன்னும் ஒன்றரை வருடங்களில் 2026-ஆம் ஆண்டுச் சட்டமன்றத் தேர்தல் வர இருக்கிறது. சட்டமன்றத் தேர்தலுக்கான பணிகளை முதன்முதலில் தொடங்கிய இயக்கம் என்றால், அது நம் திராவிட முன்னேற்றக் கழகம்தான். நம் தலைவரின் தலைமையில் கிட்டத்தட்ட ஐந்து, ஆறு மாதங்களுக்கு முன்பே தொடங்கிவிட்டோம்.

தலைமையில் இருந்து சட்டமன்றத் தேர்தல் பணிகளை ஒருங்கிணைக்க நம் முதலமைச்சர் அவர்கள் ஒரு ஒருங்கிணைப்புக் குழுவை அமைத்தார்கள். அந்தக் குழுவில் நானும் இருக்கிறேன். அதேபோல் களத்தில் தேர்தல் பணிகளை மேற்கொள்ளத் தொகுதி பார்வையாளர்களையும் நம் தலைவர் அவர்கள் நியமித்து இருக்கிறார். அதன் அடுத்த கட்டமாகத்தான், தலைவர் அவர்களின் கட்டளையின் பேரில் எந்த மாவட்டத்திற்குச் சுற்றுப்பயணம் சென்றாலும் அந்த மாவட்டத்தில் இயங்குகின்ற அனைத்து சார்பு அணிகளையும் வரவழைத்து அவர்களுடன் கலந்துரையாடி அவர்களுடன் புகைப்படம் எடுத்துகொள்கிறேன். அதன் ஒரு கட்டமாகத்தான் இந்த நிகழ்ச்சியும் நடைபெறுகிறது.

இந்திய ஒன்றியத்திலேயே வேறு எந்த இயக்கத்திற்கும், வேறு எந்தக் கழகத்திற்கும் இல்லாத சிறப்பு, நம் கழகத்திற்கு இருக்கிறது என்றால் அது நம் சார்பு அணிகளின் சிறப்புதான். நம் கழகத்தில் மட்டும் 23 சார்பு அணிகள் இருக்கிறது. ஆங்கிலத்தில் விங் என்று சொல்வோம். யூத் விங், ஐ.டி விங் என்று சொல்கிறோம். `விங்' என்றால் தமிழில் `சிறகு' என்று அர்த்தம். அந்தச் சிறகுகள் எல்லாம் சரியாகச் செயல்பட்டால்தான் வெற்றி என்ற பயணத்தை நோக்கி நாம் சிறப்பாகச் செயல்பட முடியும்.

கழகத்திற்கு எப்படி வரலாறு இருக்கிறதோ, அதேபோல் ஒவ்வொரு அணிக்கும் வரலாறு இருக்கிறது. இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை எடுத்துக்கொண்டால், அது நம் தி.மு.க-வின் மாணவர் அணி எடுத்த மாபெரும் போராட்டம்.

தமிழ்நாட்டு இளைஞர்களைக் கொள்கைப்படுத்தியது, நம் இளைஞர் அணி. பாசறைக் கூட்டங்களைத் தொடர்ந்து நடத்தியது நம் இளைஞர் அணி. இப்படி எல்லா அணிகளும் அவர்களுக்கான பணிகளைச் சிறப்பாகச் செய்துகொண்டு வருகிறீர்கள். குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்றால் சமீபத்தில் ஐ.டி விங் சிறப்பாகச் செயல்பட்டு வந்து கொண்டு இருக்கிறீர்கள்.

### தகவல் தொழில்நுட்ப அணி

மகளிர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, சிறுபான்மையினர் அணி, என்று ஒவ்வொரு அணிக்கும் ஒது தனிச் சிறப்பு இருக்கிறது. நம் இளைஞர் அணியில் இருந்துதான் முதலமைச்சர் அவர்களே வந்து இருக்கிறார். நம் கழகத்தின் பொதுச்செயலாளர் மாணவர் அணியில் இருந்து வந்தவர்.

### பயிற்சிக் களம்

இப்படி மகளிர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, வழக்கறிஞர்கள் அணி என்று பல்வேறு அணிகளில் இருந்து அமைச்சர்கள், மாவட்டக்கழகச் செயலாளர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லாம் வந்து இருக்கிறார்கள். கழக அமைப்பில் முக்கியப் பொறுப்புகளில் பணியாற்றுவதற்கான ஒரு பயிற்சிக் களம் தான் இந்தச் சார்பு அணிகள். அதனால் சார்பு அணிகளுக்கான முக்கியத்துவம் எப்போதுமே இருந்துகொண்டுதான் இருக்கும்.

சார்பு அணி நிர்வாகிகள் நாம் வெறும் சார்பு அணிதானே என்று நினைத்துக் கொள்ளக்கூடாது. கட்சி உங்களைச் சார்ந்து இருக்கின்ற நிலைமையை நீங்கள் உருவாக்க வேண்டும். நீங்கள் ஒவ்வொருவரும், உங்கள் கையில் 200, 300 வாக்குகளை வைத்திருக்க வேண்டும். அப்படி இருந்தாலே, உங்களை யாராலும் தவிர்த்துவிட்டுப் போக முடியாது. உங்களுக்கான முக்கியத்துவம் தானாகவே கிடைத்துவிடும்.

### தலைவரின் அங்கீகாரம்

இங்கு அண்ணன் செந்தில் பாலாஜி சொன்னதைப்போல ஒவ்வொருவரும் 4 அல்லது 5 பூத்தை, உங்களின் பொறுப்பு என்று எடுத்துக்கொண்டு இன்றிலிருந்து தீவிரமாக, உங்களின் தேர்தல் பணிகளைத் தொடங்குங்கள். உங்களின் பணியை, கடமையைச் சரியாகச் செய்துகொண்டு வந்தீர்கள் என்றால் நிச்சயமாக உரிய நேரத்தில், உரிய அங்கீகாரத்தை நம் கழகத் தலைவர் அவர்கள் உங்களுக்குத் தருவார்.

இந்த மூன்றரை வருடத்தில் ஏராளமான திட்டங்களை நம் திராவிட மாடல் அரசு செய்து இருக்கிறது. ஒவ்வொரு மாவட்டம், ஒவ்வொரு தாலுகா, ஒவ்வொரு ஊர், ஒவ்வொரு வீடு, இன்னும் சொல்ல வேண்டும் என்றால் ஒவ்வொரு மனிதனுக்கும் தேவையானதை நம் தலைவர் அவர்கள் அரசு சார்பாகக் கொடுத்துக்கொண்டு இருக்கிறார். உதாரணத்திற்குச் சில திட்டங்களை மட்டும் இங்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

### முத்தாய்ப்பான திட்டங்கள்

மகளிருக்கான விடியல் பயணம் திட்டம். இந்தத் திட்டத்தின் மூலம் ஒவ்வொரு மகளிரும் சராசரியாக மாதம் ரூ.900 வரை சேமிக்கிறார்கள். 600 கோடி பயணங்களை மேற்கொண்டு இருக்கிறார்கள். இதை மக்களிடம் அடிக்கடி நினைவூட்டிக்கொண்டே இருக்க வேண்டும்.

பெண்கள் படிக்க வேண்டும், பள்ளிக்கூடம் படித்தால் பத்தாது, மேற்கல்வி படிக்க வேண்டும், உயர் கல்வி படிக்க வேண்டும் என்று அரசு பள்ளியில் படித்து, உயர்கல்வி படிக்கச் சென்றால் மாதம் ஆயிரம் ரூபாய் புதுமைப்பெண் திட்டத்தின் மூலம் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு மாதமும் 2 லட்சம் மாணவிகள் பயன்பெற்று வருகிறார்கள். இதேபோல மாணவர்களும் உயர்கல்வி படிக்க வேண்டும் என்று தமிழ்ப்புதல்வன் திட்டம் வழங்கப்படுகிறது.

முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தை இந்தியாவிலேயே முதன்முறையாக நம் முதலமைச்சர்தான் அறிவித்தார். மற்ற மாநிலங்கள் எல்லாம் இதைப் பார்த்துவிட்டு இது ஒரு சிறப்பான திட்டம் என்று சொல்லி, அவர்களின் மாநிலத்தில் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த ஆரம்பித்து இருக்கிறார்கள். ஒவ்வொரு நாளும் 20 லட்சம் குழந்தைகள் இந்தத் திட்டத்தின் வாயிலாகப் பயன்பெறுகிறார்கள்.

கலைஞர் மகளிர் உரிமைத்தொகைத் திட்டம். ஒவ்வொரு மாதமும் 1 கோடியே 16 லட்சம் மகளிருக்கு மாதம் ஆயிரம் ரூபாய் நம் தலைவர் அவர்கள் மகளிர் உரிமைத்தொகையாகத் கொடுத்துக் கொண்டு இருக்கிறார்.

### சாதனைத் திட்டங்கள்

கோயம்புத்தூரில் எந்த வீட்டிற்குச் சென்று பேசினாலும் அங்குக் கழக அரசின் திட்டங்கள் மூலம் யாராவது ஒருத்தராவது பயன்பெற்று இருப்பார்கள். ஆகவே, நம் சாதனைத் திட்டங்களை அவர்களிடம் மீண்டும், மீண்டும் சொல்லி நினைவுபடுத்துங்கள்.

தேர்தலுக்கு முன்பாக ஒவ்வொரு வாக்காளரையும் நீங்கள் ஐந்து முறையாவது சந்தித்திருக்க வேண்டும். பொதுமக்கள் ஏதாவது கோரிக்கைகள் வைத்தார்கள் என்றால் உங்களாலேயே செய்ய என்றால் செய்து கொடுத்து விடுங்கள்.

முடியாதவற்றை உங்களின் அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மக்கள் பிரதிநிதிகள் கவனத்திற்கு எடுத்துச் சென்று அதை முடித்துதர முயற்சிகள் எடுங்கள். வாக்காளர் பட்டியலை சரிபார்ப்பது, நடுநிலையான வாக்காளர்களை கழக ஆதரவாளர்களாக மாற்றுவது போன்ற பணிகளை நீங்கள் இன்றிலிருந்தே தொடங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

உங்களுக்கான வழிகாட்டல்களைத் தலைமைக் கழகமும், மாவட்டக் கழகமும் தொடர்ந்து வழங்கும். வாக்காளர்களைச் சந்திக்கக் கருத்தரங்கம், தெருமுனைக் கூட்டம், நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி என எளிமையாகத் திட்டமிடுங்கள்.

களத்தில் எவ்வளவு உழைக்கிறோமோ? அதேபோல் சமூக வலைதளங்களிலும் நாம் துடிப்பாகச் செயல்பட வேண்டும். எல்லா ஊடகங்களும் உண்மையைச் சொல்லுமா என்று தெரியாது. ஆனால், நீங்கள் ஒவ்வொருவரும் ஒரு ஊடகமாக மாறி நம் கொள்கையை, உண்மையைப் பரப்ப வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

### குறைந்தது 200 தொகுதிகள்

2026-ஆம் ஆண்டுக்கான சட்டமன்றத் தேர்தலில் நம் கழக அணி நம் தலைவர் உறுதி எடுத்து இருக்கிறார். குறைந்தது 200 தொகுதிகள் வெற்றி பெற்று காட்டுவோம் என்று நம் தலைவர் சொல்லி இருக்கிறார் என்றால் அது சார்பு அணிகள் உங்கள் மீது இருக்கின்ற அந்த நம்பிக்கையை வைத்து தான் சொல்லி இருக்கிறார். அந்த இலக்கு மட்டும் தான் நம் கண்களுக்குத் தெரிய வேண்டும். அந்த 200 என்ற இலக்கில், கோவையில் இருந்து 10 தொகுதிகள் என்று நீங்கள் தொடங்கிவைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

2026-ஆம் ஆண்டில் நிச்சயம் 200 தொகுதிகளுக்கு மேல் கழக அணி வெல்லும். அதற்குச் சார்பு அணிகளின் பங்களிப்பு முக்கியமானதாக இருக்கும் என்று முதலமைச்சரிடம் நான் வாக்குறுதி கொடுத்து இருக்கிறேன். நீங்கள் அதைக் காப்பாற்றுவீர்கள் என்ற நம்பிக்கையோடு வாக்குறுதி கொடுத்து இருக்கிறேன்.

அதற்கு நீங்கள் ஒவ்வொருவரும் 100 சதவிகிதம் இல்லை 200 சதவிகிதம் உழைக்க வேண்டும். அதற்கு நீங்கள் தயாராக இருக்க வேண்டும்.

போருக்குச் செல்லும்போது கும்பலாகச் சென்றால் வெற்றிபெற முடியாது. அணி, அணியாகத் திட்டமிட்டு சென்றோம் என்றால் வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகள் அதிகமாக இருக்கும். ஆகவே தான் இங்கு இருக்கின்ற உங்களையெல்லாம் கேட்டுக்கொள்கிறேன் நாம் எல்லாம் அணி, அணியாகச் சென்று 2026-ஆம் ஆண்டுத் தேர்தல் என்ற ஜனநாயகப் போரில் நாம் வென்று காட்ட வேண்டும். அந்த உறுதியோடு, அடுத்து வருகின்ற ஒவ்வொரு நாளும் செயல்படுவோம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

### சட்டமன்ற தேர்தல் பணிகள்

தமிழ்நாட்டில் நம் கழகம்தான் சட்டமன்ற தேர்தல் பணிகளை முதலில் ஆரம்பித்தோம். எப்படித் தேர்தல் பணியை முதலில் ஆரம்பித்தோமோ, அதேபோல் தேர்தல் என்ற போட்டியிலும் முதல் இடத்தில் தி.மு.க அணிதான் நிற்க வேண்டும். அதற்கு நீங்கள் பொறுப்பெடுத்துக்கொள்ள வேண்டும். இங்கு 23 அணிகள் இருக்கிறது. நான் இந்த அணி, நீ அந்த அணி என்பதை மறந்துவிட வேண்டும். நாம் அனைவரும் கலைஞர் வழியில் வந்த நம் தலைவர் அணி என்ற ஒரே அணி என்பதை நீங்கள் உள்வாங்கிகொள்ள வேண்டும்.

2026-ல் கழகம் ஏழாவது முறையாக ஆட்சி அமைக்க, தலைவர் அவர்கள் தொடர்ந்து 2-வது முறையாக முதலமைச்சராக வேண்டும் என்றால், நீங்கள் ஒவ்வொருவரும் இன்றிலிருந்து உங்களின் பிரச்சாரப் பணிகளை, தேர்தல் பணிகளை ஆரம்பிக்க வேண்டும் என்று கூறிக்கொண்டு இந்தச் சிறப்பான வாய்ப்பை அளித்த அனைவருக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

---

## உணர்ச்சியுடன் உறுதியேற்போம்!

பெரியார் கண்டெடுத்த
பகுத்தறிவுச் சுடரொளி..

பேரறிஞர் அண்ணா போற்றிய
ஆற்றல்மிகு பேராசிரியர்...

கலைஞர் தம் அண்ணனென்று
நெகிழ்ந்து மகிழ்ந்த ஆருயிர் நண்பர்...

மாண்புமிகு முதல்வர், தலைவரின்
மனம்நிறைந்த பாசமிகு பெரியப்பா...

மாண்புமிகு துணைமுதல்வர்
இளைய (உதய) சூரியனின் பெரிய தாத்தா..

அன்புச்செல்வன் அருமை மகன்
இனமான செயல்வீரர் வெற்றியழகனின்
ஆருயிர் தாத்தா.

தமிழ்மொழி தழைத்திட நாடெல்லாம்
பகுத்தறிவு முழக்கமிட்ட...
திராவிடத்தின் திருவிளக்கு



**இனமான பேராசிரியர் பெருந்தகையின்**
பிறந்தநாளை போற்றிக் கொண்டாடுவோம்...

அரசியல் களத்தில் குறுக்கு வழிகளில்
வெற்றிக்கான முகமூடி அணிந்துவரும் தமிழின
துரோகிகளை – தி.மு.கழக எதிரிகளை வென்றெடுத்து
தமிழர்நலம்காக்க எழுச்சியுடன் வா.. உடன்பிறப்பே!

**பேராசிரியர்.**
**த.ல.கோ.இளங்கோவன்**

---

### அம்பேத்கரை விமர்சித்த உள்துறை அமைச்சர் அமித்ஷாவை

## எடப்பாடி பழனிசாமி கண்டிக்காதது ஏன்?

### அமைச்சர் கோவி.செழியன் கண்டனம்!

சென்னை, டிச. 19-

தி.மு.க. வர்த்தகர் அணி துணைத் தலைவர் அமைச்சர் முனைவர் கோவி.செழியன் வெளியிட்ட சமூக வலைதள பதிவு வருமாறு:

அண்ணல் அம்பேத்கரை அவமதித்த ஒன்றிய அமைச்சர் அமித்ஷா அவர்களை, #INDIA கூட்டணி உள்ளிட்ட முக்கிய எதிர்க்கட்சிகள் உட்பட அனைத்துச் சனநாயகச் சக்திகளும் கண்டித்திருக்கும் வேளையில், அ.தி.மு.க. தலைமை மவுனம் காப்பது ஏன்?

அண்ணல் அம்பேத்கரை விமர்சித்த அமித்ஷாவை எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி நேரடியாக கண்டிக்காதது ஏன்?

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், அமித்ஷா அவர்களுடன் சேர்ந்து அண்ணல் அம்பேத்கரை அவமதிக்கிறாரா? இல்லை அமித்ஷாவின் கருத்தை ஆமோதிக்கிறாரா?

அண்ணா. தி.மு.க., அமித்ஷா.தி.மு.க. என மாறி விட்டதால்தானே அண்ணல் அம்பேத்கர் விஷயத்தில் எதிர்க்கட்சித் தலைவர் அமைதி காக்கிறார்.

மீண்டும் பா.ஜ.க.வோடு கூட்டணி சேரும் முயற்சிகளில் அவர் மும்முரமாக இருக்கிறார்.

“அ.தி.மு.க. அழியாமல் இருக்க வேண்டுமென்றால், பா.ஜ.க. கூட்டணிக்கு வர வேண்டும்” என்று அ.ம.மு.க. பொதுச் செயலாளர் டி.டி.வி.தினகரன் கருத்து தெரிவித்திருந்தார்.

“அ.தி.மு.க.வுடன் மீண்டும் கூட்டணி அமைப்பீர்களா?” என்ற கேள்விக்கு “இல்லை” என்று பதில் சொல்லாமல் தமிழ்நாடு பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை, “பொறுத்திருந்து பாருங்கள்” என சிக்னல் காட்டியிருக்கிறார்.

அதனால்தான், கூட்டணிக்கு எங்கேயும் பங்கம் வந்துவிடக் கூடாது என்பதற்காக அம்பேத்கர் அவமதிப்பைக் கண்டிக்கத் துணிவில்லாமல் இருக்கிறாரா எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி அவர்கள்!

இவ்வாறு அமைச்சர் கோவி.செழியன் தெரிவித்துள்ளார்.

---

தி.மு.க. 15ஆவது பொதுத்தேர்தல்

## தஞ்சை தெற்கு மாவட்டம் பொருளாளர் பொறுப்புக்கான தேர்தல் வேட்பு மனுத் தாக்கல்

### தலைமைக் கழக அறிவிப்பு

“திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில், தஞ்சை தெற்கு மாவட்டம், பொருளாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட எஸ்.எஸ்.அஸ்லம் அவர்கள் அதிராம்பட்டினம் பேரூர் நகரக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டதன் காரணத்தால்,

**தஞ்சை தெற்கு மாவட்டம், பொருளாளர் பொறுப்புக்கான** தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து **2024, டிசம்பர் 22 (ஞாயிற்றுக்கிழமை) அன்று ரூ.25000/வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.”**

வேட்புமனுவினை முன்மொழிபவரும், வழிமொழிபவரும் தஞ்சை தெற்கு மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றிய/நகர/பேரூர்ச் செயலாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட பிரதிநிதிகளாகத்தான் இருக்க வேண்டும்.

தலைமைக் கழகத்தில், வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.1000/ -வீதம் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

“அண்ணா அறிவாலயம்”
சென்னை 18.
நாள்: 18 - 12- 2024.

**துரைமுருகன்,**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.